CC 227/2018,                                                                                    02.06.2026

**அ.சா.5 செல்வராஜ் (குறுக்கு விசாரணை)**

நான் எவ்வளவு நேரத்திற்கு எங்கிருந்து ரோந்து பணியை தொடங்கினோம் என்றால் காலை 04.00 மணியளவில் அரூர் வனச்சரக அலுவலகத்திலிருந்து ஜுப்பில் சென்றோம். நாங்கள் ரோந்து பணிக்காக எங்கெங்கு சென்றோம் என்றால் ஆச்சாங்காடு, பெரியபள்ளம் சரகம் ஆகிய இடங்களுக்கு சென்றோம். நான் ரோந்து பணியின் போது எங்கு இறங்கினோம் என்றால் ஆச்சாங்காடு மெயின் ரோட்டில் இறங்கி காட்டுக்கு செல்லும் பாதைக்கு சென்றோம். சம்பவம் நடந்தாக சொல்லப்படும் இடம் அடர்ந்தகாடு என்றால் சரிதான். எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியை சுற்றிவளைத்து பிடித்தாக சொல்லியுள்ளது என்றும் யார் யார் எந்த எந்த திசையில் சுற்றி வளைத்தோம் என்றால் குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை. இந்த வழக்கில் கண்ட ஆவணங்கள் அனைத்தும் வனச்சரக அலுவலகத்தில் வைத்து தான் தயார் செய்தோம் என்றால் ஒப்புதல் வாக்குமூலம் மட்டும் சம்பவ இடத்தில் தயார் செய்தோம் மற்ற ஆவணங்கள் அலுவலகத்தில் தயார் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் "அலுவலகம் அழைத்து வந்தீர்கள்" என குறிப்பிட்டு உள்ளது என்றும் அவ்வாறு ஆனால் ஒப்புதல் வாக்குமூலம் அவலுவகத்தில் வைத்து தயார் செய்ததாக தான் பொருள்படும் என்றால் சரியல்ல. 20.02.2017ம் தேதியன்று 04.30 மணியளவில் சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ஆனால் ஆவணங்கள் அனைத்தும் 06.30 மணிக்கு தயார் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சம்பவ இடத்தில் இருந்து பொருட்களை கைப்பற்றி தயார் செய்வதற்கு நேரம் ஆகிவிட்டது. நான் சொல்வது போல் ஒரு சம்பவம் நடக்கவில்லை எங்கள் மேல் அதிகாரிகள் கேட்டு கொண்டதற்கு

இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அளூர்.**